Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 217

சனிக்கிழமை 01 ஜூலை 2023

ஆனி 16 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

வீட்டுப் பாவனை மின்நுகர்வு

# 30 வரையான அலகுக்கு 65 வீத கட்டணக்குறைப்பு

இன்றுமுதல் நடைமுறை

**கொழும்பு, ஜூலை 1**

**வீட்டுப் பாவனையின்போது மாதாந்த மின்நுகர்வை 0 - 30 அலகுகளுக்குள் மட்டுப்படுத்தினால் 65 சத வீதம் வரையிலான கட்டணக் குறைப்பு கிட்டும் வகையில் மின்கட்டணம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.** »11


கொக்குத்தொடுவாயில்

## மனிதப்புதைகுழி ஜூலை 6 இல் அகழ்வு

முல்லைத்தீவு, ஜூலை 1

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் வெட்டப்பட்ட கிடங்கு ஒன்றுக்குள் இருந்து ஏராளம் மனித எச்சங்களும் பெண்களின் ஆடைகளும் மீட்கப்பட்ட »11

## வங்குரோத்திலிருந்து செப்ரெம்பரில் மீட்சி!



கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இலங்கை வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பணிப்பாளர் நிறுவனத்தில் இடம்பெற்ற »11

உள்ளகக் கடன் மறுசீரமைப்பு

## எதிராக வாக்களிக்க எதிர்க்கட்சிகள் முடிவு

கொழும்பு, ஜூலை 1

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பான யோசனைக்கு எதிராக வாக்களிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. »11

ஓட்டோக்களுக்கு

## ஓகஸ்ட் மாதம் முதல் மீற்றர் மிகக்கட்டாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் இயங்கும் ஓட்டோக்களுக்கு கட்டண மீற்றர் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மீற்றர் இல்லாத ஓட்டோக்களுக்கு »11



கிளிநொச்சியிலும்

## தனியார் கல்வி நிலையங்களுக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை!

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சியில், தனியார் கல்வி நிலையங்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்கவும், மாணவர்களின் அறநெறிக் கற்றலுக்காக »11

தேசியக் கடன் மறுசீரமைப்பு

## நாடாளுமன்றில் இன்று விவாதம்

கொழும்பு, ஜூலை 1

தேசியக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான விவாதத்தை இன்று நடத்த கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். »11

புத்தூர் வன்முறை

## 25 பெண்களுக்குப் பிணை; 6 ஆண்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம், புத்தூரில் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 31 பேரில், 25 பெண்களை பிணையில் விடுவித்துள்ளதுடன் »11

## கச்சல்சமணங்குளத்தில் விகாரை; பிக்குகள் நேற்று பாதையாத்திரை

வவுனியா, ஜூலை 1

வவுனியா, கச்சல்சமணங்குளம் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பால் சப்புமல்கஸ்கட என்று பெயர் மாற்றப்பட்டுள்ள நிலையில், அங்கு அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு ருவென்வெலிசாயவில் இருந்து பௌத்த பிக்குகள் பாதயாத்திரை »09

## பெற்றோல் விலை ரூ.10 அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 1

பெற்றோலின் (92 ஒக்ரேன்) விலை நேற்று நள்ளிரவு முதல் 10 »11

கொலையா? தற்கொலையா?

## வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் விசாரணைகளில் சந்தேகங்கள்!

5 ஆயிரம் ரூபா இலஞ்சமும் கோரினர்?

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

பெண்ணொருவரின் உயிரிழப்புத் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் விசாரணைகளில் சந்தேகம் உள்ளது என்றும், பொலிஸார் இலஞ்சமாகப் பணம் கோரினர் எனத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் »11



## யாழ். - கொழும்பு சொகுசுப் பேருந்து தீயில் எரிந்தழிவு!

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசுப் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வைத் தருவதில் மாயாஜாலம் செய்கிறது அரசு

## சித்தார்த்தன் எம்.பி. காட்டம்



**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**பொருளாதார நெருக்கடி, நாணய நிதியக் கடனுதவி, கடன்மறுசீரமைப்பு என ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் ஒவ்வொன்றை பேசுபொருளாக்கி தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் இழுத்தடிப்புச் செய்து வருகின்றது அரசாங்கம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் எங்களைப் பேச வாருங்கள் என அழைக்கின்றது. வாக்குறுதிகள் மாத்திரமே அரசால் வழங்கப்படுகின்றன. நடைமுறையில் எதுவுமில்லை. பேசுவதற்கு செல்வதை புறக்கணித்தால் சர்வதேசத்துக்கு நாங்களே தவறான பக்கத்தில் நிற்கின்றோம் என சித்திரிக்கப்படும்.

முன்னைய ஆட்சியாளர்களின் மோசமான ஆட்சியால் நாடு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அவர்கள் தாங்கள் செழிப்பாக வாழ்வதற்கு நாட்டைச் சுரண்டி பின்னடைவை ஏற்படுத்தியுள்ளனர்.

தற்போது உள்நாட்டுக் கடனை எவ்வாறு அடைப்பது குறித்து பேசப்பட்டு வருகின்றது. நாட்டு மக்களை பாதிக்காத வகையில் மறுசீரமைக்கப்படும் என்று கூறும் அரசாங்கம் மறுபுறத்தில் மக்களின் உழைப்பை உறிஞ்ச ஏற்பாடு செய்கிறது.

தற்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் இடம்பெற்று வருகிறது. இவ்வேளையில் அரசாங்கம் மேற்கொள்ளும் பேச்சுகளும் வெறும் மாயாஜாலமே - என்றார்.

(ச-19)

### மருத்துவர்களுக்குத் தட்டுப்பாடு மூடப்படும் மருத்துவமனைகள்

#### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

மருத்துவர்களுக்கான பற்றாக்குறையால் இலங்கையில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஜே.வி.பி.யின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு தலைதூக்கியுள்ளதுடன் மருத்துவர்களுக்கும் பற்றாக்குறை உச்சமடைந்துள்ளது. அரசு அனைத்தும் வழமைக்குத் திரும்பியுள்ளன எனக் கூறிவருகின்ற போதும் உண்மை நிலைவரம் சிக்கலடைந்தே வருகிறது.

நாட்டில் சுமார் 18 ஆயிரத்து 600 அரச மருத்துவர்கள் சேவையாற்றினர். அவர்களில் ஆயிரத்து 500 முதல் ஆயிரத்து 700 பேர் வரை கடமையிலிருந்து வெளியேறியுள்ளனர். 103 இருதயநோய் மருத்துவர்கள் இருக்கவேண்டிய இடத்தில் 57 பேர் வரையே உள்ளனர். அவர்களில் 8 பேர் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் ஓய்வுபெறுகின்றனர். மருத்துவர்கள் மற்றும் விசேட மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதும் பாரதூரமான நிலைமையை உருவாக்குகின்றது. சில மருத்துவமனைகளில் அவசர சத்திர சிகிச்சை மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. மருத்துவர்களுக்கான பற்றாக்குறையால் நாட்டில் சுமார் 50 வீதத்துக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது- என்றார்.

(ச-ரி2-இ)

*மிருகக்காட்சிச்சாலையில்*

### ஒரு வாரத்துக்கு சிறப்பு நிகழ்வுகள்

கொழும்பு, ஜூலை 1

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் நாளைமறுதினம் 3 ஆம் திகதி முதல் ஒருவார காலத்துக்கு பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய விலங்கியல் திணைக்களத்தின் 87 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளைமறுதினம் 3 ஆம் திகதி சகல சிறார்களுக்கும் இலவசமாக மிருகக்காட்சிச்சாலையை பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் தேசிய விலங்கியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ச-ரி)

### வரி அறவீடு குளறுபடி சீராக்க தனிநீதிமன்றம்

#### ஜனாதிபதிக்கு திட்டவரைவு

கொழும்பு, ஜூலை 1

வரி சம்பந்தமான பிரச்சினைகளை கையாள்வதற்கு தனிநீதிமன்றம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான திட்டவரைவு ஜனாதிபதி அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

உரிய காலத்தில் வரிகளை வசூலிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. உரிய காலத்தில் வரிகள் வசூலிக்கப்படாமை நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே வரி செலுத்தத் தவறிய மதுபான உற்பத்தி நிலையங்கள் மீது 14 நாள்களுக்குள் வரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு தனிநீதிமன்றம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தாமாகவே முன்வந்து வரி செலுத்துபவர்களை ஊக்குவிக்கும் சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார்.

(ச-ரி2, 6)

*ஜனாதிபதி முன்னிலையில்*

### ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடும் வாய்த்தர்க்கம்

கொழும்பு, ஜூலை 1

நிவாரண விவகாரம் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி முன்னிலையில் ஆக்ரோசமாக கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிவாரண மானிய முறைமை தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன்போது நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவுக்கும் இடையில் காரசாரமான உரையாடல் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார நிவாரண உதவித் தொகை முறையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியபோது குறைபாடுகளை என்னவெனக் கண்டறிந்து சரிசெய்யுங்கள் என்று ஜனாதிபதி உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவின் கருத்துக்கு எதிராக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கருத்துத் தெரிவிக்கையில் எழுந்த விவாதத்தையடுத்து ஜனாதிபதி தலையிட்டு தடுத்தாரெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ச-இ)




### வெளிநாட்டுப் பணியகத்தில் கட்டணங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 1

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பதிவுக் கட்டணங்கள் மற்றும் முகவர் நிலையத்தைப் புதுபித்தல் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் இன்று முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பதிவுக் கட்டணம் 17 ஆயிரத்து 928 ரூபாவிலிருந்து 21 ஆயிரத்து 467 ரூபாவாகவும் பதிவை புதுப்பிப்பதற்கான கட்டணம் 3 ஆயிரத்து 774 ரூபாவிலிருந்து 4 ஆயிரத்து 483 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளன.

(ச-ரி)



### சர்வதேச கண்காணிப்பில் அகழ்வு; உண்மை அப்போதே வெளிப்படும்

#### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 1

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் அகழ்வுப் பணிகளின்போது உண்மைகள் மூடிமறைக்கப்படும். அகழ்வுப்பணிகள் சர்வதேச கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படுவதனூடாகவே உண்மைகள் வெளிக்கொணரப்படும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மத்தியில் பச்சைச் சீருடைகள் மற்றும் மனித எச்சங்கள் என்பன நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ள நிலையில் அங்கு சென்று பார்வையிட்டபின் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

1984 ஆம் ஆண்டு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மக்கள் இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டு வரை இந்தப் பகுதி முழுமையாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்தது.

இந்தப் பகுதியில் பெரிய இராணுவ முகாம் ஒன்றும் இருந்தது என மக்கள் கூறுகின்றனர். இங்கு மீட்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையதா? அல்லது போரில் உயிரோடு பிடிக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்ட போராளிகளா? என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இது தொடர்பான முழுமையான அகழ்வுப் பணி இடம்பெற வேண்டும் - என்றார்.

(ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விபத்தால் பறிபோகக்கூடாது விலைமதிப்பற்ற உயிர்கள்!

## மருத்துவக் கலாநிதி சத்தியமூர்த்தி ஆதங்கம்



**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**வடபகுதியில் தற்போது மோட்டார் சைக்கிள் பயணம் அபாயகரமானதொன்றாக மாறியுள்ளது. அதிகரித்த வேகம், கவனக்குறைவு என பல தவிர்க்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் அக்கறையின்றி வாகனச் சாரதிகள் செயற்படுவதால் விலைமதிப்பற்ற உயிர்களைப் பறிகொடுக்கின்றனர்.**

- இவ்வாறு யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டதாவது:-

நேற்றுமுன்தினம் கல்லுண்டாய்ப் பகுதியில் நேரெதிராக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற கோரவிபத்தில் இரு இளைஞர்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

விபத்தின் பின்னர் அவர்களது உறவினர்கள் நண்பர்களின் அழுகையும் யாழ்.போதனா மருத்துவமனை விபத்து சிகிச்சைப் பிரிவில் சில மணி நேரம் அவல உணர்வை ஏற்படுத்தியது.

இவ்வாறான விபத்துகள் தற்போது வடபகுதியில் அதிகரித்துள்ளன. உந்துருளியில் பயணிக்கும் முன்னர் மிகவும் பாதுகாப்பான பயணம் செய்ய வேண்டும் என ஒவ்வொருவரும் தீர்மானம் எடுக்கவேண்டும் அல்லது உந்துருளி பாவனையை கைவிடவேண்டும். விலைமதிப்பற்ற மனித உயிர் விபத்தால் பறிபோகக்கூடாது - என்றுள்ளது. (ச-இ)

# 3 அரிசி வகைகள் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஜூலை 1

3 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. என அறிவித்துள்ளது லங்கா சதொச. நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெள்ளையரிசி, சிவப்பு அரிசி, வெள்ளை நாட்டரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோகிராம் வெள்ளை அரிசி 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 165 ரூபாவாகும். ஒரு கிலோகிராம் வெள்ளை நாடு அரிசி 7 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 168 ரூபா எனவும் ஒரு கிலோகிராம் சிவப்பு அரிசி 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 137 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3)

# மைத்திரி பங்கேற்ற நிகழ்வில் காலாவதியான குளிர்பானம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கலந்துகொண்ட நிகழ்வொன்றில் காலாவதியான குளிர்பானம் பரிமாறப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தைக் கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நேற்று வெள்ளிக்கிழமை பங்கேற்றிருந்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட தேனீர் விருந்துக்காக உடுப்பிட்டியிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து 4 குளிர்பானப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதனை மைத்திரிபாலவின் பாதுகாப்புப் பிரிவினர் பரிசோதித்தபோது காலாவதியானமை கண்டறியப்பட்டுள்ளது. (ச-26)



# நலன்புரித் திட்டத்தில் முறைகேடுகள் வவுனியாவில் பதிவுகள் ஆரம்பம்

வவுனியா பிரதேச செயலகத்தில் நலன்புரிக் கொடுப்பனவுத் திட்டத்தில் பாதிக்கப்பட்ட பயனாளிகளின் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் முன்வைப்பதற்கான பதிவுகள் 42 கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் தோணிக்கல், கூமாங்குளம், மூன்றுமுறிப்பு. வெளிக்குளம், கோவில்குளம் ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்லைனூடாக பதிவுகள் உள்வாங்கப்பட்டன. பதிவுகளை முன்னெடுப்பதற்காக 10க்கும் மேற்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்டனர். இதில் 300க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட பயனாளிகள் தங்களது ஆட்சேபனைகளை முன்வைத்து தமது பதிவுகளில் திருத்தங்களை மேற்கொண்டனர்.

இதேவேளை பயனாளிகள் பட்டியலில் முறைகேடு இருப்பின் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்குமாறும் பின்னரே இறுதிப் பட்டியல் தயாரிக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி-18)

# வவுனியாவில் வாள்வெட்டு குடும்பத் தலைவர் காயம்!

வவுனியா பண்டாரிக்குளத்தில் குழுவொன்று மேற்கொண்ட வாள்வெட்டுத்தாக்குதலில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஜீப் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றில் வந்த குழுவினர் குடும்பஸ்தர் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி தப்பிச் செல்ல முயன்றுள்ளனர்.

அதன்போது பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியபோது சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருகைதராத நிலையில் அதிரடிப்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து மூவரையும் அதிரடிப் படையினர் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து இரண்டு வாள்களையும் மீட்டனர். சான்றுப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் சட்டநடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-ரி3,18,110)

**ஐம்புலன் இல்லாட்டியும் அம்புலன்ஸ்தான் இப்பத்தைக் காலத்தில அத்தியாவசியம். எங்க பார்த்தாலும் ஒரே அக்சிடெண்ட்தான். ஆருக்கு. எப்ப, என்ன நடக்குமெண்டே தெரியாமல் கிடக்கு. திடீரெண்டு ஆருக்கும் ஒண்டெண்டால் அவையை உடன ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு போக எல்லாரும் அம்புலன்ஸைத்தான் தேடுவினம். எல்லாருக்கும் ஆபத்பாந்தவனா இருக்கிற அம்புலன்ஸை , தங்கட சொந்த வாகனம் போல வீட்டை போய்வாறதுக்கு பாவிக்கிறவையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியளோ?**

**யாழ்ப்பாணக் கம்பஸில, ஒரு மருத்துவக் கிளை இருக்குது. அங்க ஒரு அம்புலன்ஸ் நிக்குது. கம்பஸில படிக்கிற ஆயிரக்கணக்கான பிள்ளையளுக்கோ, அங்க வேலை செய்யிறவையுக்கோ திடீரெண்டு ஏதும் வருத்தம், அக்சிடெண்ட் எண்டால் அவையை உடன ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறதுக்குத்தான் அந்த அம்புலன்ஸ் அங்க நிக்குது. ஆனால் இது வரைக்கும் அப்படி அந்த அம்புலன்ஸ் அவசர வருத்தக்காரரை கம்பஸில இருந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனதே கிடையாது. அங்க வேலை செய்யிற டொக்டரை ஏத்திப் பறிக்கிறது தான் அந்த அம்புலன்ஸின்ர முழுநேர வேலையாம்.**

**காலமை எட்டரை மணிக்கு கம்பஸில் இருந்து போற அம்புலன்ஸ், 9 மணி போல டொக்டரை ஏத்திக்கொண்டு வரும். பிறகு மத்தியானம் 12 போல டொக்டர் அந்த அம்புலன்ஸில தான் சாப்பிடப் போவார். ஆற, அமரச் சாப்பிட்டிட்டு 2 மணி போல ஆள் திரும்பி வருவார். பிறகு பின்னேரம் மூண்டரை போல டொக்டரின்ர டியூட்டி முடிய அம்புலன்ஸில ஏறினால், அவரை வீட்டை கொண்டு போய் விடுறதோட அம்புலன்ஸின்ர வேலையும் முடிஞ்சிடும். பிறகு அடுத்த நாளும் அதே ரைம் ரேபிள்தான். இப்பிடியே டொக்டருக்கு பணி செய்து கிடப்பதே கம்பஸ் அம்புலன்ஸின்ர கடனா மாறிட்டுது. அதோட டொக்டரை காலமை ஏத்தியந்திட்டு, இறக்கிற நேரத்தைத் தவிர அம் புலன்ஸ் ரைவரும் அங்க நிக்கிறேலையாம். கம்பஸில ஆருக்கும் ஏதும் சிக்கல் எண்டால் இந்த அம்புலன்ஸை நம்பேலாது. ஒருவேளை அம்பது. அறுபது கிலோமீற்றர் தூரத்துல இருந்து கூட அம்புலன்ஸ் கம்பஸுக்கு வந்தாலும், உள்ளுக்க நிக்கிற இந்த அம்புலன்ஸ் வருமோ எண்டது டவுட் தான்.**

**டொக்டர் எண்டா அவர் போய்வர வாகன ஒழுங்கு செய்யத்தான் வேணும். அதுக்காக அங்க நிக்கிற அம்புலன்ஸையும், ரைவரையும் இதுக்கு மட்டுமே பாவிக்கிறது எந்த வகையில நியாயம்? வேணுமெண்டால் டொக்டருக்கு போக்குவரத்துக்கு ஒரு அலவன்ஸைக் குடுத்தால் அவர் தன்ர வாகனத்தில வந்துபோவாரே? செலவும் மிச்சம் தானே. அம்புலன்ஸ் எண்டது அவசர நோயாளருக்கு எண்டது மெத்தப்படிச்சவையிருக்கிற கம்பஸ் பெரியவைக்கு தெரியாமல் இருக்குமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்
# 2,383 நாளில் போராட்டம்

கிளிநொச்சி, ஜூலை 1
கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதிகோரி நடத்திவரும் போராட்டத்தின் 2ஆயிரத்து 383 ஆவது நாளான நேற்று வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நட்டஈடும் வேண்டாம் மரணச் சான்றிதழும் வேண்டாம். சர்வதேச விசாரணையே தேவை என வலியுறுத்தினர். (ச-ரி2, 113)

# பிரஜைகள் குழு நிர்வாகத்தெரிவு

மன்னார், ஜூலை 1
மன்னார் மாவட்டத்தின் பிரஜைகள் குழுவின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த திங்கட்கிழமை மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நடைபெற்றது.
இதில் தலைவராகத் தலைமன்னார் பங்குத் தந்தை ச.மாக்கஸ், உபதலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். சபூர்தீன், செயலாளராக ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் ச.செசாரியஸ் பெர்னாண்டோ, உபசெயலாளராக அரச சார்பற்ற நிறுவனத்தின் இணைப்பாளர் கொ.தயாளராஜன், பொருளாளராக இலங்கை தேசிய நிர்மாணிய சங்கத் தலைவர் அ.அன்ரன் றேமன்ஸ் குரூஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-ரி3- 60)



# பாடசாலை மைதானம் மைத்திரியால் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1
உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 3.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட மைதானத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.
தொடர்ந்து பாடசாலை மாணவர்களுடனான கலந்துரையாடலிலும் அவர் பங்கேற்றார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பாடசாலை அதிபர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலநறுவை மேற்கு அமைப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-ரி3-26)

# பொலிஸாருக்கு கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1
சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு காங்கேசன்துறையில் பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் பயிலும் பொலிஸ் அதிகாரிகளுக்கு கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வு இடம்பெற்றது.
கருத்தரங்கில் வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் பங்கேற்று கருத்துரையாற்றினார்.
'சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு' என்னும் தலைப்பில் சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டங்கள், சித்திரவதைக்கு எதிரான தண்டனைகள் மற்றும் சித்திரவதையிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (ச-ரி2)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலய அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ரி)

# யாழ்.பொதுநூலகத்தை பார்வையிட்ட மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வரும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்குச் சென்று பார்வையிட்டார்.
அங்குள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாமின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.
பின்னர் நூலகத்தின் பிரதான பகுதிகளான வாசகர் பகுதி, வாசிப்புப் பகுதி, தகவல்தொழில்நுட்பப் பகுதி, மாநாட்டு மண்டபம் உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டார். (ச-ரி3-27)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வீண் செலவுகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். மனதில் சஞ்சலம் ஏற்படும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மிதுனம் :** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண் செலவுகள் ஏற்படும். முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பரபரப்பாகச் செயல்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். பிரச்சினைகள் நீங்கும். விற்பனையும் லாபமும் கூடும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். உதவி கிடைக்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளால் கையிருப்பு குறையக்கூடும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பண உதவி கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். செலவுகள் அதிகரிக்கலாம்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. முயற்சி செய்யவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## என்ன சொல்லப்போகிறார் ரணில்?

'அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணவும், நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிக்கவும் அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணையவேண்டும். முக்கியமாக தமிழ்க் கட்சிகள் தனித்தனியாகப் பிரிந்து நிற்காமல் எம்முடன் ஒன்றிணைந்து பயணிக்க முன்வரவேண்டும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வில் உரைநிகழ்த்தியிருக்கின்றார். அரசியல் தீர்வுக்காக தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரளுமாறு சிங்களத் தலைவரொருவர் கூறுவது இதுவொன்றும் முதல்முறையன்று. காலத்தைக் கடத்துவதற்காக அவர்கள் இவ்வாறு கருத்துரைப்பது வழமை. காலத்தை இழுத்தடித்து விடயத்தை நீர்த்துப்போகச் செய்வதில் வல்லவரும் கட்சிகளைப் பிளப்பதில் கைதேர்ந்தவருமான ரணில் விக்கிரமசிங்க அதைச் சொல்வதில் புதினமில்லை. ஆனால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டிய நிர்ப்பந்த சூழலில், நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டாகவேண்டும் என்ற கட்டாயத்தில் தீர்வுக்கான பேச்சை கண்துடைப்புக்காக தமிழ்க் கட்சிகளுடன் நடத்திக்கொண்டிருக்கும் தருணத்திலும், இந்தியாவுக்கு அவர் செல்லவுள்ளவேளையிலும் இப்படியொருக் கருத்தை கக்கியிருக்கின்றார்.

அரசியல் தீர்வுக்காகத் தமிழ்த் தரப்புகளை ஒரு புள்ளியில் இணையச் சொல்லும் ரணில் விக்கிரமசிங்க, சிங்களத் தரப்புகள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதற்கு அவ்வாறு ஒரு புள்ளியில் நின்று கொண்டிருக்கின்றனவா? என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும். இந்த நாட்டை ஆட்சி செய்த பிரதான இரண்டு தரப்புகளுமே, தமிழர்களுக்கு ஒரு தரப்பு தீர்வை வழங்க முற்பட்டால் மற்றைய தரப்பு அதனை எதிர்ப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றன. 1999 ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரால் பிராந்தியங்களின் ஒன்றியத் தீர்வுப்பொதி முன்வைக்கப்பட்டது. அப்போது எதிரணியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அரசமைப்பைத் தீயிட்டார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு பேச்சு முயற்சிகளை முன்னெடுத்தபோது எதிரணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்த ராஜபக்ச கும்பல் அதனை எதிர்த்தது. பின்னர் நல்லாட்சிக் காலத்தில் தீர்வு முயற்சி முன்னெடுக்கப்பட்டபோதும் ராஜபக்ச கும்பல் அதனை எதிர்த்துக் குழப்பியடித்தது.

தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சியைக் குழப்பும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்கள – பௌத்த கடும்போக்குவாதமே கையில் எடுக்கப்படுகின்றது. ஆட்சிக்கு வருகின்ற பிரதான தரப்புகள் இதனையே தமக்கான முதலீடாக மாற்றியிருந்தன. ஒவ்வொரு தரப்பும் மற்றைய தரப்பைவிட கூடுதலாக சிங்கள – பௌத்த கடும்போக்கை மக்கள் மத்தியில் விதைத்து வாக்குகளை அறுவடைசெய்தன. இதன் விளைவாக இன்று வரையில் தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சி நகர முடியாமல் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் முன்பு மண்டியிட்டுள்ளது.


தமிழ் அரசியல் கட்சிகளை நோக்கி விரலை நீட்டிய ரணில் விக்கிரமசிங்கவை நோக்கியே எஞ்சிய விரல்கள் அதே கேள்வியைத் தொடுத்து நிற்கின்றன. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் சமஷ்டித் தீர்வு என்பதில் அவர்களுக்கு இடையில் வேறுபாடான கருத்துகள் இல்லை. அதனை வழங்குவதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் ஓரணியாகத் தயாரா? என்பதுதான் கேள்வியே. முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் 13 ஆவது திருத்தத்தைப்பற்றி கதைத்துக் கொண்டு காலத்தைக் கடத்துவதை விடுத்து தமிழ்க்கட்சிகள் கோரும் சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு சிங்களத் தலைவர்கள் முன்வருவார்களா?

ஒற்றையாட்சிக்குள் தீர்வைக் காண்பது என்பது நீர் மேல் எழுத்தைப் போன்றது. அந்தத் தீர்வு நிலைத்து நிற்காது. அதைத்தாண்டி உறுதியான – நிலையான அரசியல் தீர்வுக்காக சமஷ்டி முறைமையிலான அதிகாரப்பகிர்வை ஓரணியில் கோரும் தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் ரணில் என்ன சொல்லப்போகின்றார்?

---

நாளொரு நல்வார்த்தை

"முறையான கல்வி உங்களுக்கு வாழக்கற்றுக்கொடுக்கும்; உலகறிவே உங்களை வளமாக்கும்"
— ஜிம் ரோஹன்




# தமிழ்க் கூட்டமைப்பினர் தேசத்துரோகிகள்

## வீரசேகர கொக்கரிப்பு



கொழும்பு, ஜூலை 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தேசத்துரோக அமைப்பாகும். எனவே, அந்தக்கட்சியின் முடிவுகள் தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை என்று விமர்சித்துள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்படையின் முன்னாள் தளபதியுமான சரத் வீரசேகர.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கவுள்ளதே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு விமர்சித்தார்.

'நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் எல்லாவற்றையும் எதிர்க்கும் தேசத்துரோக அமைப்பே கூட்டமைப்பு. புலிகள் அமைப்பின் அரசியல்கிளையே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு. புலிகளுக்கு இந்த நாட்டைப் பிரிக்கவேண்டும். பிரபாகரன் முன்னிலையிலேயே கூட்டமைப்பினர் பதவியேற்றனர். அவர்கள் கூறுவது தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை' எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டார். (ஒ-44)

# காலாவதியான சேவைகள் இறையாண்மைக்கு முரண்

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 1

கலைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களை மீள நிறுவுவதற்கு நாட்டின் ஜனநாயகத்துக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றங்களை மீளக் கூட்டும் அதிகாரத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கும் சட்ட வரைவு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் சுட்டிக்காட்டியதாவது:

தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரமே அதிகாரம் உண்டு. கால அளவைத் தாண்டி அந்தந்தப் பதவிகளில் செயற்பட மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் வழங்கவேண்டியது மக்களே. அந்த அதிகாரத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்குவது நாட்டின் ஜனநாயகத்துக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (ச-இ)

## கடன் மறுசீரமைப்பு

# ஐ.ம.ச. எதிர்ப்பு பெரமுன ஆதரவு

கொழும்பு, ஜூலை 1

நாட்டின் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள திட்டவரைவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பை வெளியிடும் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அதேவேளை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு பொதுஜன பெரமுன ஆதரவாக வாக்களிக்கும் என அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பிரேரணை மீதான நாடாளுமன்ற விவாதம் இன்று சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

---

நாளை 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை ஆனி 17

சுபநேரம் : 08.56 – 10.26
ராகுகாலம் : 04.26 – 05.56

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இந்தியா நினைத்திருந்தால் போரைத் தடுத்திருக்கமுடியும்

## தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கருத்து

**லண்டன், ஜூலை 1**

**இலங்கையில் 2009ஆம் ஆண்டு இறுதிப்போரை அப்போதைய இந்திய மத்திய அரசாங்கம் நினைத்திருந்தால் எளிதில் தடுத்திருக்கலாம். இலங்கைப் போரைத் தடுக்க வேண்டிய பொறுப்புகளில் இருந்தும் தவறியுள்ளது காங்கிரஸ் கட்சி. இது வரலாற்றில் மன்னிக்க முடியாத தவறு.**


- இவ்வாறு பிரிட்டனில் இடம்பெற்ற புலம்பெயர் தமிழர்களுடனான சந்திப்பில் தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர்களுக்காக உணர்வு பூர்வமான பேச்சுகளை நிகழ்த்துவதைத் தவிர திடமான எதையும் செய்யவில்லை திராவிட அரசியல்வாதிகள்.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும் 13 ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். இலங்கையில் மேற்கொண்டுள்ள முதலீடுகள், கடன் உதவி உள்ளிட்டவை, இலங்கைத் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தாமதப்படுத்தலாம். ஆயினும் இலங்கையின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்காக நாம் குரல்கொடுப்போம் - என்றார். (ச-இ)

# சிறுமி உட்பட 3 பேர் உயிரிழப்பு!



கொழும்பு, ஜூலை 1

வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் சிறுமி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. புத்தளம், பிடிகல, கிண்ணியா ஆகிய பகுதிகளில் இந்த விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

கிண்ணியாப் பகுதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து தடுப்பில் மோதியதில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார். விபத்தில் உயிரிழந்த சிறுமி, தந்தை, தாய் மற்றும் மற்றுமொரு குழந்தை மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளதுடன், சாரதியான தந்தை காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, புத்தளம் வீதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் 48 வயதுடைய சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிடிகல பிரதேசத்தில் பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் அதே பஸ்ஸின் பின் சக்கரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். சித்திரகொட, அமுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ஒ-22)

### வடக்கை ஆக்கிரமிக்கும்

# கடலட்டைப் பண்ணைகளால் பல்லுயிர்களும் அழிவடையும்

## சமூகச் செயற்பாட்டாளர்கள் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கை ஆக்கிரமிக்கும் கடலட்டைப் பண்ணைகளால் அடுத்த பத்து ஆண்டுகளில் யாழ்.குடாக்கடல் பாரம்பரிய கடற்றொழிலில் இருந்து விலகி சேற்றுக் கடலாக மாறுவதனை யாராலும் தடுக்கமுடியாது. இது கடல் வாழ் உயிரினங்களுக்கு மாத்திரமின்றி ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் தாக்கத்தைச் செலுத்தும் என சமூகச் செயற்பாட்டாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கடலட்டைப் பண்ணைகள் நன்மை பயப்பன என உலக வங்கியால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இடம்பெற்ற விழிப்புணர்வுக் கலந்துரையாடலில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.


இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் எந்த வித ஆய்வுகளும் திட்டமிடல்களுமின்றி கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடல் மேலாண்மைக்காக கட்டமைக்கப்பட்ட கடற்கரையோர மீனவ மக்களின் வாழ்க்கைமுறையை அட்டைப் பண்ணைகள் என்ற பெயரில் பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன.

எமது பாரம்பரிய கடற்றொழிலில் இருந்து விலகி அட்டைப் பண்ணை தொழில் விஸ்தரிக்கப்பட்டு வருவதால் அடுத்த பத்து ஆண்டுகளில் குடாக்கடல் சேற்றுக் கடலாக மாற்றமடைவதை எவராலும் தடுக்கமுடியாது. இது கடல்வாழ் உணவுச் சங்கிலியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது மட்டுமன்றி ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

எமது மக்கள் மரபுகளுக்குட்பட்டு மேற்கொள்ளும் கடற்றொழிலை வெளிநாட்டுச் சக்திகளுக்கும் பினாமி நிறுவனங்களின் தேவைக்காகவும் மாற்ற முயற்சிப்பதற்கு இடமளிக்க முடியாது - என்றனர். (ச-27)



# மருத்துவர்களின் வயதெல்லை 63 ஆக உயர்த்த இணக்கம்!

கொழும்பு, ஜூலை 1

விசேட மருத்துவ நிபுணர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆக அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மருத்துவ நிபுணர்களுக்கு ஓய்வு வயதெல்லை 60 ஆக அறிவிக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடுமாறுகோரி 176 விசேட மருத்துவர்கள் ரிட் மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனு கடந்த செவ்வாய்க்கிழமை பரிசீலிக்கப்பட்டது.

இதன்போது விசேட மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆக அதிகரிக்க சுகாதார அதிகாரிகளிடமிருந்து அறிவுறுத்தல் கிடைத்துள்ளது. அமைச்சரவை இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கும் என சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக ஜெனரல் நெரின் புள்ளே நீதிமன்றில் தெரிவித்தார். (ச-இ)

# ஒன்றோடொன்று மோதி 3 வாகனங்கள் விபத்து!

சாவகச்சேரி, ஜூலை 1

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை சாவகச்சேரி எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

முதியவரொருவர் வீதியைக் கடக்க முற்பட்டவேளை வெள்ளைக்கோட்டுக்கு அப்பால் பயணித்த காரை எதிர்த் திசையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது. அவ்வேளையில் தொடர்ந்து வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளும் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3-9)



### விமானத்தில் கோளாறு

# புறப்பட்டுச் சென்ற எயார்லைன்ஸ் கட்டுநாயக்காவில் தரையிறக்கம்

கொழும்பு, ஜூலை 1

இலங்கைக்குச் சொந்தமான சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் புறப்பட்டுச் சென்ற 2 மணித்தியாலயங்கள் 25 நிமிடங்களில் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீளவும் கட்டுநாயகக விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ஜப்பானின் நரீட்டா சர்வதேச விமான நிலையத்துக்குப் புறப்பட்டுச் சென்ற இலங்கை விமானமே இவ்வாறு தரையிறக்கப்பட்டது.

விமானத்தின் சக்கர அமைப்பு வளைந்து செல்வதாக கணினி அமைப்பு சுட்டிக்காட்டவில்லை. அதனையடுத்து விமானியின் திறமையால் மீள விமானம் தரையிறக்கப்பட்டு அதில் பயணித்த 300 பயணிகள் காப்பாற்றப்பட்டனர் என விமான நிலைய வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி கச்சாய் வீதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஞான வீரபத்திரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் வீதியுலா கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது. (ய-125)



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமான் ஞாபகார்த்தமாக அகில இலங்கை ரீதியாக மேற்படி காங்கிரஸ் தலைமையகமான கொழும்பு சௌமியபவனில் கடந்த 14ஆம் திகதி புதன்கிழமை நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் கவிதைப் போட்டியில் காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி விருது பெற்றார். (ய-159)




## நூற்றாண்டு விழா.

வவுனியா - கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் முதலாம்நாள் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி பாடசாலை வளாகத்தில் ஆரம்பமாகியது. குறித்த நூற்றாண்டு விழாவில் விருந்தினர்களால் நுழைவாயில் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை, பண்டாரவன்னியன் சிலை, அப்துல்கலாம் சிலை என்பனவும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் க.பொ.த சா/த பரீட்சையில் 9ஏ பெற்ற மாணவர்கள், 2021 இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், 2021 இல் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள், 2022 இல் எறிபந்தில் தேசியம் சென்ற அணி போன்ற மாணவர்களுக்கு கௌரவிப்பும் மரதன், கரப்பந்து, வடக்கு வலய ஆசிரியர்களுக்கிடையிலான துடுப்பாட்டம், மாணவர்களுக்கான துடுப்பாட்டம், வலைப்பந்து, கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது. (ய-110)

## குருதிக்கொடை



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் திணைக்களங்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. (ய-19)



கடந்த ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இடைநிலைக் கல்வியை வரணிப் பிரதேசப் பாடசாலைகளில் தொடர்கின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி ஊக்குவிக்கும் நிகழ்வு வரணி ஒன்றியத்தின் அனுசரணையுடன் இயற்றாலை அ.மி.த.க. பாடசாலையில் அதிபர் திருமதி தவசொரூபி சிறீமோகன் தலைமையில் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது பொருளாதாரத்தில் நலிவுற்ற குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. (ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவாச்சாரியார்களுக்கு சிவத்தமிழ் விருது

யாழ்ப்பாணம், ஜூலை 1

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய முன்னாள் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பதினைந்தாவது ஆண்டு குருபூசை தினநிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர். சி. ரகுராம் பிரதம விருந்தினராக பங்கேற்றார்.

நிகழ்வில் மூன்று மூத்த சிவாச்சாரியார் களுக்கு சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக்குருக்கள், ஈவினை கற்பகப் பிள்ளையார் கோயில்பிரதமகுரு சிவஸ்ரீ. தி. கெங்காதரக் குருக்கள், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வ ரக்குருக்கள் ஆகிய மூன்று மூத்த சிவாச்சாரியார்களுக்கே சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ப. முத்துக்குமார சுவாமிக் குருக்கள் குறித்த விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டு அழைக்கப்பட்ட போதிலும் சுகவீனம் காரணமாக அவர் பங்கேற்கவில்லை. அவர் சார்பாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயப் பிரதம குரு சு.செந்தில்ராஜக் குருக்கள் விருதைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

(ச-ரி,66)


## Rent

Rooms Available only for Girls.
Rooms with attached Bathroom,
Near the Jaffna town and Hospital
Suitable for. Doctors, Medical
Students and Workers Meals also
available. (CS/25394)AH-1

Contact:- 076 313 6818


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் மாவட்ட விவசாயப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி ச.சுதர்சனா** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமிர்தநாதன் நற்குணசிங்கம்**

அவர்கள் கடந்த (2023.06.18) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(cr 40250) (N - 1)


## கடை வாடகைக்கு உண்டு

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் ஆடிய பாதம் வீதி. திருநெல்வேலியில் (யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக) அமைந்துள்ள கட்டட தொகுதியில் கடைகளும் 1 ஆம் தளத்தில் 1200 சதுர அடி கொண்ட கட்டடமும் வாடகைக்கு உண்டு. காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார் அலுவலகங்களுக்கும் ஏற்றதாகும்.

தொடர்புகளுக்கு:
**தலைவர் / செயலாளர்**
**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,**
**183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.**

**021 222 3814**
**077 665 3323**

(cr.40256) (N.1)


## மரண அறிவித்தல்



**திரு.செல்லத்துரை செல்வம்**

மஞ்சத்தடி இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை செல்வம் நேற்று (30.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனுடன் இரண்டறக்கலந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

077 978 9594
021 224 1734

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திரு. V.T. நடராஜா**

(Retired Deputy Director, Ministry of Finance General Treasury, Colombo Sri Lanka)

யாழ் மீசாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. V. T. நடராஜா அவர்கள் 26-06-2023 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா காசிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற குமரையா புனிதவதியார் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற வடிவாம்பிகை நடராஜா (Retired Graduate Science Teacher-Colombo) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் மற்றும் கனகரட்ணம் (Post Master) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, விஜயலக்ஷ்மி, பத்மனாதன் (Retired Principal), நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனரும், T. N. பாலமுரளி (Bank of America), Dr. பாலமுகுந்தினி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹேமவதனி (Formar Technical Officer-Sri Lanka Telecom), விஜேந்திரன் (Australia) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ருதி மற்றும் அனேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் சு.தேவரதி (அதிபர் அல்லாரை அ.த.வித்தியாலயம்), சி.தேவதர்சினி(ஆசிரியர் அல்லாரை அ.த.வித்தியாலயம்), சு.தேவநந்தினி (யாழ் பிராந்திய மருந்தாளர் RDHS) ஆகியோரது அன்புப் பெரியப்பாவும் ஆவார்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மீசாலை மேற்கு. (cr 40257) (N -1)

தகவல்:
குடும்பத்தினர்
077 9672 960

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 10 . 1994



மறைவு
29 . 06 . 2023

**ஜெயசுந்தரம் சறோஜன் (சுதா)**
**(வாகன மெக்கானிக்)**

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசுந்தரம் சறோஜன் (சுதா - வாகன மெக்கானிக்) கடந்த (29.06.2023) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஜெயசுந்தரம் - சிவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தயாளினியின் (தயா) பாசமிகு கணவரும், டஸ்மிளா (யேமா), தனுஜன் (தனு), நிது ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருவரசமூர்த்தி (மூர்த்தி - சிற்பாசாரி) யின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி மத்தி வேலன்காடு இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CR/40253)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 01 . 1959



மறைவு
15 . 06 . 2023

**திரு. சிங்கராசா வில்லியம் ஜோர்ஜ்**

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் குருநகர் மற்றும் சுவிஸ் (Sion) யை வதிவிடமாகவும் கொண்ட சிங்கராசா வில்லியம் ஜோர்ஜ் கடந்த (15.06.2023) வியாழக்கிழமை அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொமிங்கு சிங்கராசா புஸ்பநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிங்கராயர் தார்சீசியஸ், லீலாவதி தம்பதியரின் அன்பு மருமகனும், சொபியா வதனி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா / புனித ஜோன் பொஸ்கோ வித்தியாயலம், யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், பிலோமின் பிரசாந்தி (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அவர்களின் பாசமிகு தந்தையும், டொனால்ட் றீகன் (தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்) அவர்களின் அன்பு மாமனாரும், [illegible]ட்வின் அவர்களின் அன்புப் பேரனும், குணவதி, சாள்ஸ் (சுவிஸ்), செல்வதி, ஜெயவதி (சுவிஸ்), ராஜன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான ஜெயம் - செல்வராணி மற்றும் அற்புதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்திமா, தேவதாஸ், பீற்றர் ஜெயரஞ்சன் (சுவிஸ்), றூபி (சுவிஸ்), சர்மிலா (சுவிஸ்), எஸ்மி (சுவிஸ்), ஆனந் - ஜேன்பாமினி (நோர்வே), ஜொணி எல்மோ (பிரான்ஸ்), நிஷாந்தினி, விமல் (VVMART & CONSTRUCTION) - ஜெயந்தினி, தயானந் - லக்ஷினி (பிரான்ஸ்), அருட்தந்தை நிருபன் (ஜேர்மன் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குநர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (01.07.2023) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யா/ திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைக்கு முன்பாகவுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு தூய யாகப்பர் ஆலயத்தில் (குருநகர்) இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

169, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:
யோ.டொனால்ட் றீகன் - 077 728 3700

தகவல்:
குடும்பத்தினர்
திருமதி வதனி ஜோர்ஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்றியுடன் மோதி ஒருவர் படுகாயம்!

**A/C Bus உதவியாளர்கள் தேவை**

யாழ். கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவையில் ஈடுபடும் A/C பஸ்களுக்கு உதவியாளர்கள் உடனடியாகத் தேவைப் படுகின்றனர். ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 009 4946

**A/C Bus ஆசனபதிவாளர் தேவை**

யாழ். கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவையின் யாழ். ஆசன பதிவு அலுவலகத்திற்கு ஆசன பதிவாளர் உடன் தேவைப்படுகின்றனர். யாழ். மாநகரசபைக்குட்பட்ட ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 009 4946

யாழ்., ஜூலை 1

யாழ்ப்பாணம் - வடமராட்சி முள்ளி இராணுவச் சோதனைச் சாவடிப் பகுதியில் வீதிக்குக் குறுக்காகச் சென்ற வளர்ப்புப் பன்றியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த வின்சென் டிபோல் (வயது - 36) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். வீதியால் சென்றவர்களால் அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.


(அ-ம-27)

## மரண அறிவித்தல்

### திரு. மோசஸ் எட்வேட் ஜோர்ச்

(முன்னாள் ஊழியர், சிறேநார் மற்றும் நொதேன் இன்டஸ்ரீஸ்)

**தோற்றம் : 04.01.1947** **மறைவு : 29.06.2023**



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மோசஸ் எட்வேட் ஜோர்ச் நேற்று முன்தினம் (29.06.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ் எட்வேட் (அரியகுட்டி) விக்ரோறியா (பாக்கியம்) தம்பதிகளின் அன்பு மகனும், சகாயமலரின் (பவா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சில்வெஸ்ரர் சிவக்கொழுந்து-அனி ஆகியோரின் அன்பு மருமகனும், ஷியான் சார்லஸ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - கல்வி வலயம், தீவகம்), ஜெகான் றெஜிலஸ் (வாடிக்கையாளர் தொடர்பு உத்தியோகத்தர் - Singer Finance), டிசான் நோயல் (Qatar), சகானா விக்ரோறின் (முகாமைத்துவ பயிலுனர், WebBuilders.lk) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மேரி றெஜினாவின் (சந்திரா) பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற மோசஸ் அமலதாஸ் மற்றும் சகாயநாயகம், சகாயராணி, சகாயராஜா (ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனிஸ்ராவின் (ஆசிரியை- திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு மாமனாரும், நினோன் அனிஷியா (ஆசிரியை- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செறேனஸ் நிஷாந்தன் (ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாய்மாமனாரும், மிருஷ்னிகாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.07.2023) பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இறுதி ஆசீர்வாதத்தின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.46, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

077 346 8854
076 355 2934

தகவல்: குடும்பத்தினர்.

# மண்டைதீவு கந்தசுவாமி ஆலயம்

## ஒருதலைப்பட்ச முடிவு கூடாது: தர்மகர்த்தாக்களுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

மண்டைதீவு, சிறுப்புலம் கந்தசுவாமி ஆலயத்தில் தர்மகர்த்தாக்களை இணைந்து செயற்படுமாறும் ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுக்கக் கூடாது என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.


இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

மண்டைதீவு, சிறுப்புலம் கந்தசுவாமி ஆலயத்துக்கு இரு தர்மகர்த்தாக்கள் காணப்படுகின்ற நிலையில் அவர்களில் ஒருவராக வேலாயுதபிள்ளை ஜெயசுந்தரராஜா என்பவர் உள்ளார். அவர் ஆலய கும்பாபிஷேகத்துக்காக பாலஸ்தானம் செய்து 75 வீதமான வேலைகளை முடித்துள்ள நிலையில், கனடாவில் உள்ள மற்றுமொரு தர்மகர்த்தா, வேலாயுதபிள்ளை ஜெயசுந்தரராஜாவைப் புறக்கணித்துச் செயற்பட்டதுடன் தன்னிச்சையான முடிவுகளையும் எடுத்துள்ளார். அத்துடன் அவர் வேலாயுதபிள்ளை ஜெயசுந்தரராஜா ஆலயத்துக்குள் செல்வதற்குத் தடைகளையும் ஏற்படுத்தியுள்ளார். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட தர்மகர்த்தாவால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், தர்மகர்த்தாக்களில் ஒருவரான வேலாயுதபிள்ளை ஜெயசுந்தரராஜா என்பவருக்குத் தெரியாமல் ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுக்கமுடியாது எனவும் அவருக்கு ஆலயத்துக்குள் செல்ல அனுமதி மறுக்கமுடியாது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

(அ-ம-125)

## மரண அறிவித்தல்

பிறப்பு 24.06.1943



இறப்பு 28.06.2023

### சுப்பிரமணியம் தர்மரத்தினம்

வடமராட்சி கரவெட்டி வதிரியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கண்டாவளை செல்வபதியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வவுனியா தோணிக்கல் மற்றும் கனடா ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இலங்கை செஞ்சிலுவை சங்கம் கிளிநொச்சி முன்னாள் தலைவரும், போரூட் நிறுவனத்தின் முன்னாள் இணைப்பாளரும், முன்னாள் விசேட ஆணையாளருமான ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் தர்மரத்தினம் அவர்கள் கடந்த (28.06.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் பாசமுள்ள கணவரும், காலஞ்சென்றவர்களான முருகர் செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரபோஸ் (பாபு - கனடா), கஸ்தூரி (வபி - லண்டன்), தர்மினி (சுபி- அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மிர்ணா (கனடா), அபிசேக் (கனடா), அனுஸ்கா (லண்டன்), அன்வி (அவுஸ்திரேலியா), அயானா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரராசசிங்கம், இராசமணி (மலேசியா), காலஞ்சென்ற குமாரசாமி, சிவபாக்கியம் (லண்டன்), கனகசிங்கம், இரத்தினசிங்கம் ( கனடா), இராசேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விநாயகசேந்திரம் (கனடா), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் (ஐஸ்கிறிம்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் (தேவன்), காலஞ்சென்ற சிவனேஸ்வரன் (மனோ) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மைத்துனர் அமரர் ஐஸ்கிறிம் அவர்களின் புளியம்பொக்கணை இல்லத்தில் நாளை (02.07.2023) நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கண்டாவளை கோனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு: 0777 542455

தகவல்: குடும்பத்தினர்.

### கச்சல்சமணங்குளத்தில்...

மேற்கொண்டுள்ளனர். அநுராதபுரத்தில் உள்ள ருவென்வெலிசாய விகாரையில் கடந்த 28ஆம் திகதி கல்கமுவ சாந்தபோதி பௌத்த பிக்கு தலைமையில் ஆரம்பமான இந்தப் பாதயாத்திரை நேற்றுக் காலை வவுனியா கண்டி வீதியில் உள்ள விகாரையை வந்தடைந்தது. அங்கிருந்து வவுனியா காலபோகஸ்வெள பகுதியில் உள்ள சிங்கள குடியேற்றப்பகுதியில் அமைந்துள்ள சபுமல்கஸ்கட விகாரையைச் சென்றடைந்தது. குறித்த பாதயாத்திரையில் 50 க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் மறைந்த பௌத்த பிக்குகளின் கேசம், பற்சின்னம் உள்ளிட்ட புனிதப் பொருள்களுடன் சென்று அதனை அங்கு பார்வைக்கு வைப்பதுடன், எதிர்வரும் போயா தினத்தன்று விசேட வழிபாடுகளையும் நடத்தவுள்ளனர்.

(அ-ம-110)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



29.06.2023 அன்று இடம்பெற்ற மக்கள் நலன்பேணும் அமைப்பின் கோண்டாவில் கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு **மைத்திரிபால சிறிசேன** [முன்னாள் ஜனாதிபதி] அவர்களால் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**தேசகீர்த்தி கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சமூக சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும் -
**விஸ்ராவிசன், யாழ்ப்பாணம்.**

(cs25395) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெக்ஸிக்கோவில் வெப்பம் உக்கிரம்

3 வாரங்களில்

**100 பேர் சாவு**



மெக்சிகோ. ஜூலை 1
மெக்ஸிக்கோவில் கடந்த 3 வாரங்களாக நீடிக்கும் தீவிர வெப்ப அலையால் 100க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பதாக அந்த நாட்டின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.
மெக்ஸிக்கோவின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த மூன்று வாரங்களாக வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸை எட்டியுள்ளது.
இதனால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
தீவிர வெப்ப்அலை காரணமாக இதுவரை 100க்கும் அதிகமானவர்கள் பலியாகி இருக்கிறார்கள்.
கடந்த ஆண்டின் இதே மாதத்தில் வெப்ப அலைக்கு ஒருவர் மட்டுமே பலியாகி இருந்தார் என்று மெக்ஸிக்கோ சுகாதாரத் துறை அமைச்சகம் மேலும் குறிப்பிட்டது. (ச-இ)



# உணவுப் பஞ்சத்தில் பிரிட்டன்

### ஏழு பேரில் ஒருவர் பட்டினி ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**லண்டன், ஜூலை 1**
**பிரிட்டனில் 14 சதவீத மக்கள் உணவுப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஆய்வில் தெரிவிக்கப்படுகிறது.**

'டிரசல் டிர்ஸ்ட்' என்ற அமைப்பு நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.
உலகின் பல நாடுகளைத் தனது காலனித்துவ நாடுகளாக ஆட்சி நடத்திய பிரிட்டன் தற்போது கடும் பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கிறது. அண்மைக்காலமாக அந்த நாட்டில் லட்சக்கணக்கான மக்கள் உணவின்றிப் பட்டினியில் வாடுகின்றனர்.
பிரிட்டனில் ஏழு பேரில் ஒருவர் பட்டினிக்கு ஆளாகின்றனர். ஒட்டு மொத்த மக்கள் தொகையில் 7 சதவீதம் பேர் தொண்டு அமைப்பு களையே உணவுக்காக சார்ந்து இருப்பதாக அந்த ஆய்வின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.
இதேவேளை ரஷ்யா - உக்ரைன் இடையே நடைபெறும் போர் காரணமாக உலக நாடுகளின் உணவுச் சங்கிலி விநியோகம் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.
குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் உணவு நெருக்கடி தலைதூக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பறக்கும் இயந்திரத்தில் பீட்ஸா டெலிவரி

லண்டன், ஜூலை 1
பீட்ஸா விற்பனை செய்யும் நிறுவனங்கள் புதுப் புது முயற்சியில் வாடிக்கையாளர்களுக்கு விரைந்து சேவை வழங்க முயன்றுவரும் நிலையில், பிரிட்டனில் பறக்கும் இயந்திரம் மூலமாக பீட்ஸா விநியோக சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
பறக்கும் இயந்திரத்தை மனிதன் அணிந்து கொண்டு பறந்து சென்று பீட்ஸா விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.
அதனால் போக்குவரத்து நெருக்கடி, விபத்துகள் என்பவை தவிர்க்கப்பட்டு ஆகாயத்தில் பறந்து சென்று பாதுகாப்பாக விரைவாக பீட்சா விநியோகம் செய்யப்படுகிறது. (ச-இ)

## விண்வெளி வீரர்களின் சிறுநீரே குடிதண்ணீர்

### ஆய்வில் நாஸா வெற்றி

வொஷிங்டன், ஜூலை 1
விண்வெளியில் தண்ணீருக்கான தீர்வு காண பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், விண்வெளி வீரர்களின் சிறுநீர் மற்றும் வியர்வை ஆகியவற்றை மறுசுழற்சி மற்றும் சுத்திகரிப்புச் செய்து அதிலிருந்து குடிதண்ணீரைப் பெறும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
விண்வெளி வீரர்களின் உண்வு, காற்று மற்றும் கழிவுகளை மறுசுழற்சி செய்வதன் மூலம் பெறப்படுகிறது.
இந்தநிலையில் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய விண்வெளி வீரர்களின் சிறுநீர் மற்றும் வியர்வை ஆகியவற்றை மறுசுழற்சி சுத்திகரிப்புச் செய்து அதிலிருந்து பெறும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.
இந்த முயற்சி முழுமையாக வெற்றி அடைந்தால் வரும் காலங்களில் விண்வெளி வீரர்களின் தண்ணீர்த் தேவையைப் பெறுவதில் பெரிய அளவிலான வெற்றியைப் பெறலாம் என நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## பல்கலை மாணவர் தெரிவில் இனம், சாதி நீக்கம்

### அமெ. உச்சநீதிமன்றம் தீர்ப்பு



வொஷிங்டன், ஜூலை 1
சிறுபான்மையினருக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நீண்ட கால நடைமுறையை முறியடித்து, பல்கலைக்கழக சேர்க்கையில், இனம் மற்றும் சாதியின் அடிப்படையில் மாணவ சேர்க்கை நடைபெறுவதை அமெரிக்க உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது.
ஒருவர் கறுப்பினத்தவரா, வெள்ளை இனத்தவரா என்ற அடிப்படையில் பல்கலைகளில் சேர்ப்பதும் பாகுபாட்டுக்கு இணையானது. அனுபவங்கள் மற்றும் திறமைகளின் அடிப்படையிலேயே மாணவர் சேர்க்கை நடைபெறவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை தாம் முற்றிலுமாக ஏற்கவில்லை என அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.
இனப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் வாய்ப்பை பறிக்கும் தீர்ப்பு இது என அமெரிக்க துணை அதிபர் கமலாஹாரிசும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.
கடைப்பிடிக்கப்பட்டு வந்த நீண்ட கால நடைமுறையானது நாங்களும் இந்த மண்ணைச் சார்ந்தவர்கள் தான் என்பதை நிரூபிக்கும் வகையில் அமைந்திருந்தது. இந்தத் தீர்ப்பை அடுத்து எங்கள் முயற்சிகளை இரட்டிப்பாக்கவேண்டிய தருணம் இது என அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்
மறுபுறம் அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பைப் பாராட்டியுள்ள முன்னாள் அதிபர் ட்ரம்ப், இது தேசத்துக்குச் சிறந்த நாள் என்று கூறியுள்ளார். (ச-இ)



## ரஷ்யா - உக்ரைன் போரால் சுற்றுச்சூழல் பாதிப்பு

## ஆய்வுக் குழுவில் கிரெட்டா

மொஸ்கோ. ஜூலை 1
ரஷ்யா - உக்ரைன் போரால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புக் குறித்து ஆராயும் குழுவில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த சூழலியல் ஆர்வலர் கிரெட்டா துன்பெர்க் இடம்பெற்றுள்ளார்.
உக்ரைன் தலைநகர் கீவ் நகரத்துக்கு அவர் ஆய்வுக் குழுவினருடன் நேற்று வெள்ளிக்கிழமை சென்று ஆய்வு மேற்கொண்டுள்ளார்.
உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து 16 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், போரால் சுற்றுச்சூழல் எந்த வகையில் எல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதை இந்தக் குழு ஆய்வு செய்கிறது.
இது குறித்து கிரெட்டா அளித்த பேட்டியில்,
"உக்ரைன் அணை உடைப்பு போர்க் குற்றமாக விசாரிக்கப்படவேண்டும். இது சுற்றுச்சூழல் மீதான குற்றவியல் தாக்குதலே.
சோவியத் காலத்தில் கட்டப்பட்ட இந்த அணையை ரஷ்யப் படைகள் தகர்த்ததாக உக்ரைனும், உக்ரைன் படைகள் தாக்கியதாக ரஷ்யாவும் மாறி மாறி குற்றஞ்சாட்டி வருகின்றன.
இந்த நிலையில் இந்த அணையிலிருந்து நீர் வெளியேறியதால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பை இந்தக் குழு தீவிரமாக ஆய்வு செய்யவுள்ளது"- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 வரையான...

மின்சாரக் கட்டணக் குறைப்புக்குப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று அனுமதி வழங்கியது. இந்தக் கட்டணக் குறைப்பு இன்றுமுதல் நடைமுறைக்கு வருகின்றது. இதன்படி, மாதத்துக்கு 0 - 30 அலகுகள் வரையிலான குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் இன்றுமுதல் 65 சதவீத மின் கட்டணக் குறைப்பைப் பெறுவார்கள் என்று பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை - 31-60 அலகுகளில் உள்ள மின் பயனாளர்களுக்கு 51.5 சதவீதக் கட்டணமும், 61-90 அலகுகளில் உள்ள மின் பயனாளர்களுக்கு 24.5 சதவீதக் கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது. ஹோட்டல்களுக்கு 26.3 சதவீதம் மின்கட்டணக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது. தொழில்பிரிவில் 9 சதவீதமும், வணிகக் கட்டடங்களில் 5 சதவீதமும், மத நோக்கப் பிரிவில் 16 சதவீதமும், அரச திணைக்களங்களுக்கு 0.8 சதவீதமும் மின்கட்டணக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-ம)

## ஓகஸ்ட்...

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் தரிப்பிட அனுமதி மறுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்துவது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணம் ஓட்டோச் சங்கத்தில் பதிவுசெய்து யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இயங்கும் ஓட்டோக்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் மீற்றர்கள் இல்லாமல் இயங்கமுடியாது. மீற்றர்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் முன்னெடுக்கப்பட வேண்டும். எதிர்வரும் 16, 17, 18ஆம் திகதிகளில் பொலிஸார் யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிகளுக்குள் ஓட்டோக்களைச் சோதனையிட்டு 'ஸ்ரிக்கர்' ஒன்றை ஒட்டுவார்கள். அந்த ஸ்ரிக்கர் ஒட்டப்படாத ஓட்டோக்கள் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து இயங்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகள், ஓட்டோக்களின் உரிமையாளர்கள், கட்டண மீற்றர் பொருத்தும் நிறுவன பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-125)

## எதிராக...

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி, விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை என்பனவே இந்த முடிவை எடுத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் தமது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 28ஆம் திகதி கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பான யோசனை நாடாளுமன்ற நிதிக்குழுவிலும் முன்வைக்கப்பட்டுள்ளது. நிதிக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் இன்று சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்படும். நாடாளுமன்றத்தில் நடைபெறும் வாக்கெடுப்பின்போதே அதற்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிரணிகள் தீர்மானித்துள்ளன. எனினும், அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கான சாதாரண பெரும்பான்மைப் பலம் அரசின் வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## மனிதப்புதைகுழி...

நிலையில், அந்தப் பகுதியில் எதிர்வரும் 6ஆம் திகதி அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரத்தின் மூலம் நேற்றுமுன்தினம் நிலத்தைத் தோண்டியபோது இந்தத் தடயங்கள் அவதானிக்கப்பட்டன. இதையடுத்து கொக்கிளாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இது தொடர்பில் நேற்றையதினம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், ஜூலை 6ஆம் திகதி அந்தப் பகுதியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. (அ-ம-125)

## வங்குரோத்திலிருந்து...

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். குறிப்பாக உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-ம)

## தனியார்...

ஞாயிற்றுக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கு முன்னர் தனியார் வகுப்புக்களை நடத்தாதிருக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் நிர்வாகிகளுக்கும் மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரனுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 116 கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். இவற்றில் 63 கல்வி நிலையங்களே பதிவுகளை மேற்கொண்டுள்ள நிலையில், ஏனைய கல்வி நிலையங்களை விரைந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், வெள்ளிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாணவர்களின் அறநெறிக் கற்றலுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் வெள்ளிகளில் தனியார் வகுப்புக்களை முற்றாக நடத்தாதிருக்கவும் ஞாயிறுகளில் நண்பகல் 12 மணிவரை நடத்தாது இருக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் கல்வி நிலையங்களின் சுகாதாரம் தொடர்பிலும், மலசலகூட வசதிகள் மற்றும் குடிதண்ணீர் வசதிகள் தொடர்பிலும் அறிவுறுத்தப்பட்டது.

மாணவர்களின் ஆன்மீக மற்றும் அறநெறிக் கற்றலுக்காக வெள்ளிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் தனியார் வகுப்புக்களை நடத்தாதிருப்பதற்கு யாழ்ப்பாணத்தில் முன்னதாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## 26 பெண்களுக்குப்...

6 ஆண்களை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

புத்தூர் கலையொளி கிராமத்தில் இளைஞர்கள் இருவரின் வீடுகளுக்குள் புகுந்த 50க்கும் மேற்பட்டோர், அந்த இளைஞர்கள் இருவரையும் தாக்கியதுடன் பெறுமதியான பொருள்களையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் இரண்டு வீடுகளும் பெருமளவு சேதமடைந்ததுடன், தாக்குதலுக்குள்ளான இரண்டு இளைஞர்கள் காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பெண்களின் ஒளிப்படங்களை கணினியில் ஆபாசமாக கிராபிக் செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என்ற அடிப்படையில் 21 வயது தொடக்கம் 25 வயதான இளைஞர்கள் இருவரின் வீடுகள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியே நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலேயே 25 பெண்கள் உட்பட 31 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் 25 பெண்களையும் பிணையில் விடுவித்த நீதிமன்றம் 6 ஆண்களையும் எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (அ-ம-26,66,125)

## நாடாளுமன்றில்...

இதன்படி இன்று காலை 9.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை இந்த விவாதம் நடைபெறவுள்ளதுடன், நாளை ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் இருப்பதற்கும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாடாளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சித் தலைவர்கள் அடங்கிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்றுப் பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம)

## யாழ். -...

பேருந்து ஒன்று மதுரங்குளிய கரிகெட்ட பகுதியில் நேற்று அதிகாலை திடீரென தீப்பிடித்ததில் பேருந்து முற்றாக எரிந்து நாசமானது. எனினும், பயணிகள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இந்தப் பேருந்து நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளது. பேருந்து தீப்பிடித்த போது, பேருந்தில் 40 க்கும் அதிக பயணிகள் இருந்துள்ளனர். எனினும் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் அனைவரும் பாதுகாப்பாக இறக்கப்பட்டுள்ளனர். சில பயணிகளின் பொதிகள் மட்டும் எரிந்துள்ளன.

'தீ விபத்துக்கு முன்னர் புத்தளத்தை அண்மித்த பகுதியில் பயணிகள் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தியவேளையில், பேருந்தை சோதனையிட்ட போதும் விபத்துக்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை' என பேருந்தின் சாரதி பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பேருந்து தீப்பிடித்ததையடுத்து, புத்தளம் நகரசபையின் தீயணைப்பு பிரிவு மற்றும் பாலாவி விமானப்படை தீயணைப்பு பிரிவினர் வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், அதற்குள் பேருந்து முழுமையாகத் தீப்பிடித்து எரிந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-22,26)

## வட்டுக்கோட்டைப்...

முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம், வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லசுட்டிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பி.இராஜேஸ்வரி என்ற பெண்ணின் சகோதரராலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

'எனது சகோதரி அவரது கணவரால் துன்புறுத்தப்பட்டு வந்தார். எனவே சகோதரியின் மரணத்துக்கு அவரது கணவரே காரணமாக இருக்கலாம். இது குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த போதும் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளாத வட்டுக்கோட்டைப் பொலிஸார், உடலை எதிராளியிடம் ஒப்படைத்து தீயிட்டு எரிக்க அனுமதித்துள்ளனர்' என்று உயிரிழந்த பெண்ணின் சகோதரரால் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தனது சகோதரி உயிரிழந்தபோது அவரது கையில் தங்கமோதிரமும், காதில் தோடுகளும் இருந்தன என்றும், உடலை ஒப்படைக்கும்போது அவற்றைக் காணவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக பொலிஸாரிடம் கூறியபோது அவர்கள் தரக்குறைவாகப் பேசினர் என்றும், தங்களிடம் 5 ஆயிரம் ரூபா இலஞ்சமாகக் கோரினர். எனினும் தங்களிடம் 5 ஆயிரம் ரூபா இல்லாததால் 2 ஆயிரம் ரூபாவையே பொலிஸாருக்குக் கொடுத்தோம் என்றும் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான முறைப்பாடு தங்களுக்குக் கிடைத்துள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் கனகராஜ் உறுதிப்படுத்தினார். இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-எ-26)

## பெற்றோல்...

ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டன. 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. புதிய விலையாக 328 ரூபா நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 95 ஒக்ரேன் பெற்றோலின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 365 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் சூப்பர் டீசலின் விலை 6 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலையாக 346 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் டீசலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 308 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 236 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

விபத்தில் காயமடைந்த நபரொருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். முல்லைத்தீவைச் சேர்ந்த குணரத்தினம் றெஜினோல்ட் (வயது – 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த 15ஆம் திகதி இறப்பு வீடு ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற அவர் கிடங்கு ஒன்றுக்குள் சறுக்கி விழுந்து காயமடைந்துள்ளார். அவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.



- வெல்டர் (Welder)
- சுத்திகரிப்பாளர் (Cleaner)



மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் இன்று (01.07.2023) சனிக்கிழமை, மு.ப. 9.00 - 2.00 மணி வரை நேரில் சமுகம் தரவும். முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

உதயன்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட $O^+$ குருதி வகையைச் சேர்ந்த நபருக்கு சிறுநீரகம் தேவை.

076 590 7834

(CS/51030/AH)

## English Classes

Gr.1 to O/L
Grammar with Spoken
வீடு வந்து கற்பிக்கப்படும்.

077 331 4608 - யாழ்ப்பாணம்

(CS/25389/AH)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= (இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 8260 354, 076 0570 354

## கடை மற்றும் அறைகள் வாடகைக்கு



**கடை**

காப்புறுதி மற்றும் நிதி நிறுவனங்கள் வணிக நிறுவனங்களுக்கு ஏற்றதாகும்.

**அறைகள்**

வெளிமாவட்ட பயணிகள், சுற்றுலா பயணிகள்.

பொன்னாலை வீதி, மானிப்பாய்.
(பொலிஸ் நிலையம் அருகாமையில்)

தொடர்புகளுக்கு
076 212 9031

## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனை பொருட்கள், விளையாட்டு பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடல் பட்டினகள், குடைகள், அழகுசாதன பொருட்கள், மாஸ்க் வகைகள், கவரிங் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்று கொள்ளலாம்.

உரிமையாளர்:
தே. கலைத்தாசன் (கரன்)
021 3155 900

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி)யாழ்ப்பாணம்.


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 07 . 1948

மறைவு 11 . 07 . 2022



### அமரர் பொன்னையா மகாதேவன்

(வெங்கா. INN மலிபன் வீதி, கொழும்பு 11)

யாழ். புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் , யாழ். வண்ணார்பண்ணையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பொன்னையா மகாதேவன் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பு வழிகாட்டி
அனைவரையும் அரவணைத்த எங்கள்
அன்புத் தெய்வமே!
வீசும் காற்றினிலும்
நாம் விடும் மூச்சினிலும்
எட்டுத் திக்குகளிலும் உம்
நினைவால் வாடுகிறோம் அப்பா!
உம் இழப்பை ஈடு செய்ய
முடியாமல் தவிக்கின்றோம்
மீண்டும் பிறந்து வருவீரா
எம் அன்பு அப்பாவே!
இனி எப்போ எம் முகம் பார்ப்பாய்?
உன் புன்முகம் பார்க்க ஏங்கித்
தவிக்கின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1929

மறைவு 30 . 06 . 2023



### இராசரத்தினம் செல்லம்மா

காரைநகர், பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் துணுக்காய், பாலாவோடை காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் செல்லம்மா நேற்று (30.06.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-கதிராசிப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-இராசம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் பொன்னம்பலம் (துணுக்காய்), காலஞ்சென்றவர்களான அன்னம்மா, சரஸ்வதி, மல்லிகாதேவி, தேவராசா மற்றும் புஸ்பராசா (லண்டன்), யோகராசா (லண்டன்), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி, தேவராசா (பதுளை), மனோரஞ்சிதம், துளசிமலர் (லண்டன்), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பாலசிங்கம் மற்றும் தருமலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சிதம்பரம், இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், தவச்செல்வி, அருட்செல்வி (பிரான்ஸ்), பவானி, சுகந்தினி, குமுதினி, சுரேஸ்குமார் (பிரதம பொறியியலாளர்- Building Department, Vavuniya), யோகராணி (பொறியியலாளர்- CECB), தர்சினி, பிரதீபன், தயாளன், யதுஷா (லண்டன்), ரேணுகா (லண்டன்), பிரபாகரன், சதீஸ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவராசா மற்றும் தயாபரன், சசீதன், சுமங்கலா, இந்திரகுமார் ஆகியோரின் அன்புப் பேத்தியும் கிருஷாந்த் (கனடா), தனுஜா (கொழும்பு பல்கலைக்கழகம்), நிரோஷன், கிருஷன், விபுஷன், ரஜீபன், கிருஷன், தர்சன், தனுசன், காவியா, சஜனிகா, நஜனிகா, அபிநயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை (03.07.2023) அவரது பாலாவோடை இல்லத்தில் நடைபெற்று காலை 8.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புக்கு: 0777 28 0149

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/25399/A-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.